# News Release

# வாகன் நகரின் கனடா தின விழாவில் சிறப்புக் கலை நிகழ்ச்சியைப் பிரெஸ்டன் பாப்லோ வழங்க உள்ளார்.

## *ஜூலை 1ஆம் தேதி வடக்கு மேப்பிள் பிராந்திய பூங்காவில் நடைபெறும் விழாவில் எங்களுடன் இணையுங்கள்.*

**வாகன் (ஜூன் 9, 2025)** – கனடாவின் 158வது பிறந்தநாளை எங்களுடன் சேர்ந்து கொண்டாடுங்கள்!

உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை அழைத்து, **ஜூலை 1, செவ்வாய்க்கிழமை** அன்று நடைபெறும் கனடா தின விழாவில் எங்களுடன் சேர்ந்து, மறக்கமுடியாத ஒரு நாளை அனுபவியுங்கள்! நாள் முழுவதும் இலவசமான மகிழ்ச்சிகரமான கலை நிகழ்ச்சிகளும் செயல்பாடுகளும் நடைபெறும். இதில் **JUNO விருது பெற்ற பிரெஸ்டன் பாப்லோ அவர்கள் 3 மணிக்கு வழங்கும் சிறப்புக் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.**

வாகன் நகரம் வருடந்தோறும் நடத்தும், விருதுகளையும் வென்ற "Vaughan Celebrates Canada Day" நிகழ்ச்சி, இவ்வாண்டும் **வடக்கு மேப்பிள் பிராந்திய பூங்கா (11085 Keele St.) இடத்தில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை** நடைபெறும். இதில் சிறந்த நேரடி கலை நிகழ்ச்சிகள், பல்வேறு செயற்பாடுகள், இருப்பு உள்ள வரை இலவசமாக வழங்கப்படும் பரிசுகள் மற்றும் இதற்கு மேலாகப் பல சிறப்பு அம்சங்கள் இடம்பெறும். சுவையான உணவுகளை வழங்கும் உணவு டிரக்குகள் நிகழ்ச்சி இடத்தில் இருக்கும், அதனால் நீங்கள் நாள் முழுவதும் சுவையான உணவுடன் மகிழலாம். விற்பனையாளர்கள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளைக் காட்சிப்படுத்தும் அல்லது விற்கும் வணிகப் பகுதி மற்றும் சந்தையையும் நீங்கள் பார்வையிடலாம்.

மேடை பொழுதுபோக்கு காலை 10 மணிக்கு துவங்கி, பிறகு 12:15 மணிக்கு மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்களின் அதிகாரப்பூர்வ வரவேற்பு நடைபெறும்.

இந்த ஆண்டு நீங்கள் தவறவிடக்கூடாத பிரத்யேக நிகழ்ச்சிகள்: இந்நிகழ்வில் உள்ள கலை நிகழ்ச்சிகள்:

- பிரெஸ்டன் பாப்லோ
- கீஸா

- சீன லைரா நடிப்பு
- The Eyrie அமைப்பின் பறவைகள் பற்றிய கல்வி விளக்கக்காட்சி
- லிட்டில் ஜிங்கிள் பீன்ஸ்: Wicked-ல் இருந்து கிளின்டா + எல்ஃபபா
- பில்விசார்ட் (கனடியன் ஒலிம்பிக் பிரேக் டான்சர் தங்க பதக்கம் பெற்றவர்)
- Dance Together Project + Naach for Fun குழுக்கள் இணைந்து நடத்தும் பாலிவுட் நடன பணிமனை
- Drums Et Al மற்றும் சஹாப் ஹபீபி அவர்களின் ட்ரம் நிகழ்ச்சிகள்
- ஸ்பிரிங்கிரீக் சிங்கர்ஸ் மற்றும் டான்சர்ஸ்
- Leave Those Kids Alone (இசை நிகழ்ச்சி)

எல்லா வயதினரும் மகிழ்ச்சியாக அனுபவிக்கப் பல்வேறு செயல்பாடுகள் இடம்பெறும், அவை:

- கலை, கைவினை மற்றும் ஊடாடும் செயல்பாடுகள்
- கோடாரி எறிதல் (வயது 18 மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே)
- இலவச பரிசுகள் (இருப்பு உள்ள வரை)
- கிளிட்டர் டாட்டூக்கள்
- ஜிம் பேருந்து மற்றும் சிந்தனைத் தூண்டும் விளையாட்டு பேருந்து (sensory bus)
- ஹாக்கி சர்க்கஸ் காட்சி
- மிட்வே சவாரிகள் மற்றும் காற்று நிரப்பிய சறுக்கு
- பிங்-பாங் மேசைகள்
- பொழுதுபோக்குச் செயல்பாடுகள்
- ஸ்டில்ட் வாக்கர்ஸ் மற்றும் உலா பொழுதுபோக்கு

செயல்பாடுகளும் நிகழ்ச்சிகளும் மாற்றத்திற்கு உட்பட்டவை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**இலவச ஷட்டில் பேருந்தில் பயணம் செய்யுங்கள்!**

நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் நேரடியாக வாகனம் நிறுத்த வசதி இல்லை. எனினும், St. Raphael the Archangel Catholic Elementary School (131 Ravineview Dr.)’ல் வாகனத்தை நிறுத்திவிட்டு நடந்து வரலாம். இருப்பினும், அங்கு வாகனம் நிறுத்தும் இடங்கள் குறைவாக மட்டுமே உள்ளன.

நிகழ்விற்கு எப்படிச் செல்லலாம்? வடக்கு மேப்பிள் பிராந்திய பூங்கா செல்லும் மற்றும் அந்த இடத்திலிருந்து திரும்பும் இலவச ஷட்டில் பேருந்து பின்வரும் இடங்களில் இருந்து இயக்கப்படுகிறது:

- மேப்பிள் சமூக மையம் (Maple Community Centre) (10190 Keele St.)
- வாகன் நகர மண்டபம் (Vaughan City Hall) (2141 Major Mackenzie Dr.)

- VMC நூலகம் (VMC Library) (200 Apple Mill Rd.) ***கட்டண வாகனம் நிறுத்துமிடம்**

ஷட்டில் சேவை காலை 9 மணி முதல் மாலை 4:30 மணி வரை தொடர்ந்து இயங்கும், எனவே எப்போது வேண்டுமானாலும் வரலாம் மற்றும் முழு நிகழ்ச்சியையும் அனுபவிக்கலாம்!

வாகனின் கனடா தின விழா குறித்து மேலும் அறிய, vaughan.ca/**CanadaDay**-ஐ பார்வையிடவும்.

**மேற்கோள்**
“ஜூலை 1, செவ்வாய்க்கிழமை அன்று, உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்துடன் அழகான வடக்கு மேப்பிள் பிராந்திய பூங்காவில் உங்களைச் சந்திக்க ஆசைப்படுகிறேன். கனடா தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட, இனிமையான நினைவுகளை உருவாக்கக்கூடிய ஒரு நாளாக இருக்கும். அன்றைய தினம் அசத்தலான மேடை நிகழ்ச்சிகள், சுவையான உணவுகள் மற்றும் நிறையப் பொழுதுபோக்கு நிகழ்வுகளால் நிரம்பியிருக்கும். எல்லோருக்கும் ஏதாவது ஒன்று உண்டு – முக்கியமாக, நம் முக்கிய நட்சத்திரம் பிரெஸ்டன் பாப்லோவுடன் கூடி நடனமாடுவதிலிருந்து Wicked நாடக பாடல்களைப் பாடுவதுவரை, மேலும் மிட்வே சவாரிகள், கோடாரி எறிதல் ஆகியவற்றை அனுபவிப்பது வரை – உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் இது ஒரு முழுமையான மகிழ்ச்சியான நாள்! இந்த விடுமுறையில், நம்மால் 'வீடு' என அழைக்கக்கூடிய இந்த அழகான நாட்டைக் கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல், கனடியர்களாக நம்மைப் பெருமைப்பட வைக்கும் மதிப்புகளையும் சிந்திப்பதற்கான நேரம் இது —
ஒற்றுமை, வலிமை, பெருந்தன்மை, மரியாதை போன்ற இந்த மதிப்புகளை நான் வாகன் சமூகத்தில் நாள்தோறும் காண்கிறேன். நாம் அறிந்த சிறந்த வழியில் கனடா தினத்தை ஒன்றாகக் கொண்டாடுவோம்!”
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

**முக்கியத் தகவல்கள்**

- வாகன் நகரம் நடத்திய விருதுபெற்ற வருடாந்திர கனடா தின விழா ஜூலை 1, செவ்வாய்க்கிழமை அன்று வடக்கு மேப்பிள் பிராந்திய பூங்கா (11085 Keele St.)-இல் காலை 10 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்.
- 2025-ஆம் ஆண்டின் விழா நன்கொடையாளர்: டிம் ஹார்டன்ஸ்.

# News Release

- 2024 ஆண்டு Festivals and Events Ontario விருதுகளுக்கான விழாவில், “Vaughan Celebrates Canada Day” ஒன்டாரியோவின் சிறந்த 100 விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

**மேலும் அறிய**

- [vaughan.ca/**CanadaDay**](vaughan.ca/CanadaDay)

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca